தினமலர்

# வெளிநாடுகளில் தேவை அதிகரிப்புகாபி ஏற்றுமதி 3.26 லட்சம் டன்னாக உயர்வு

ஏப்ரல் 09,2011,04:06



கொச்சி:சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் காபி ஏற்றுமதி, அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. சென்ற நிதியாண்டில், 3.26 லட்சம் டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த 2009-10ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 60 சதவீதம் அதிகம்.உலகின் பல நாடுகளில், இந்திய காபிக்கு தேவை அதிகரித்துள்ளதால், இதன் ஏற்றுமதி,சென்ற ஆண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு மிகவும் அதிகரித்துள்ளது என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

முந்தைய ஆண்டை விட, சென்ற நிதியாண்டில் காபிக் கொட்டையின் விலை அதிகரித்ததும், டாலர் மதிப்பு மற்றும் ரூபாய் மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி உயர்விற்கு முக்கிய காரணம்.காபி ஏற்றுமதி, டாலர் மதிப்பின் அடிப்படையில், 83 சதவீதம் அதிகரித்து, 81.11 கோடி டாலராகவும், ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 75 சதவீதம் உயர்ந்து, 3,789 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.சென்ற நிதியாண்டில், ஏற்றுமதிக்கான ஒரு கிலோ காபி கொட்டையின் சராசரி விலை, 116 ரூபாய் என்ற அளவில் இருந்தது.

இது, இதற்கு முந்தைய ஆண்டு, 106 ரூபாயாக இருந்தது. கடந்த ஆறு மாதங்களில், இதன் விலை 131 ரூபா# என்ற அளவில் அதிகரித்திருந்ததாக காபி வாரியம் தெரிவித்துள்ளது.நம்நாட்டிலிருந்து,

இத்தாலி, அதிகளவில் காபியை இறக்குமதி செய்து கொள்கிறது. நாட்டின் மொத்த காபி ஏற்றுமதியில், இந்நாட்டின் பங்களிப்பு 24 சதவீதம். இதைதொடர்ந்து, ஜெர்மனி (14 சதவீதம்), பெல்ஜியம் (10 சதவீதம்) ஆகிய நாடுகளும், அதிகளவில் காபியை இறக்குமதி செய்து கொள்கின்றன.சென்ற நிதியாண்டில், நாட்டின் காபி உற்பத்தி சிறப்பாக இருந்தது. கையிருப்பிலும் 30 ஆயிரம் டன் இருந்தது.

சென்ற டிசம்பர் மாதம் முதல், நடப்பு பிப்ரவரி மாதம் வரையில் அறுவடையான காபி கொட்டைகளின் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில், உள்நாட்டில், 2.99 லட்சம் டன், காபி உற்பத்தியாகி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டு உற்பத்தியை விட, 3.2 சதவீதம் அதிகம். கர்நாடகாவில் இதுவரை, 2.04 லட்சம் டன் காபி உற்பத்தியாகி இருக்கும் என, கர்நாடக காபி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சென்ற காபி பருவத்தில், அரபிக்கா காபி, 90 ஆயிரம் டன் உற்பத்தியாகும் என, மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதன் உற்பத்தி, இலக்கை விட சற்று குறைந்திருப்பதாக தெரியவந்துள்ளது. ரொபஸ்ட்டா வகை காபி அறுவடை, தற்போது தான் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் 80 சதவீதம் ஏற்றுமதியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**தேயிலை உற்பத்தி 7 சதவீதம் குறைவு**

ஏப்ரல் 09,2011,04:04



புதுடில்லி:சென்ற பிப்ரவரி மாதத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி 7 Œதவீதம் குறைந்துள்ளது. நடப்பு 2011ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், நாட்டில் 1 கோடியே 76 லட்சம் டன் தேயிலை

உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்தாண்டு, இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 6.88 சதவீதம் குறைவாகும்.

நாட் டின் வடக்கு,தெற்கு பகுதிகள் மற்றும் @மற்குவங்கத்தில் தேயிலை உற்பத்தி குறைந்ததால், மொத்த தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.கடந்த 2010ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி, 1.88 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு 2011ம் காலாண்டர் ஆண்டின், முதல் இரண்டு மாதங்களில் தேயிலை உற்பத்தி, 16.41 சதவீதம் குறைந்து, 4.50 கோடி டன்னிலிருந்து 3.76 கோடி டன்னாக குறைந்துள்ளது.எனினும், சென்ற பிப்ரவரியில், அசாம் மாநிலத்தின் தேயிலை உற்பத்தி, இரண்டு மடங்கு அதிகரித்து, 44 ஆயிரம் கிலோவிலிருந்து 94 ஆயிரம் கிலோவாக உயர்ந்துள்ளது.

**பருத்தி கையிருப்பு குறைந்து வருவதால் கவலை : தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2011,21:27 IST

திருப்பூர் : நம் நாட்டில் எதிர்பார்த்த அளவு பருத்தி விளைச்சல் இல்லாததால், 27.50 லட்சம் பேல் பருத்தி மட்டுமே இறுதி கையிருப்பாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பஞ்சுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் நூற்பாலை உரிமையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.நம் நாட்டில் பஞ்சாப், மத்தியபிரதேசம், குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் பருத்தி அதிகம் விளைகிறது. கர்நாடகா மற்றும் தமிழகத்தில் பருத்தி விளைச்சல் குறைவு.

தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு மட்டும் 110 லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. மொத்த விளைச்சல் 10 லட்சத்தை கூட தாண்டுவதில்லை. இதனால், வெளிமாநிலங்களை நம்பியே தமிழக நூற்பாலைகள் இயங்குகின்றன. நம் நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்கு, மாதம் 22 லட்சம் பேல் தேவைப்படுகிறது.கடந்த சில ஆண்டுகளாகவே, பருத்தி கையிருப்பு படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த 2009-10ல் 71.05 லட்சம் பேல் இருப்பு வைக்கப்பட்டது. கடந்த 2010-11ல் 40.50 லட்சம் பேல் கையிருப்பாக இருந்தது. எதிர்பார்த்த அளவு விளைச்சல் கிடைக்காததால், இந்தாண்டு 27.50 லட்சம் பேல் மட்டுமே கையிருப்பு இருக்குமென பருத்தி ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதனால், மீண்டும் பஞ்சு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை மென்மேலும் உயருமென நூற்பாலை உரிமையாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர். பருத்தி சீசன் துவங்குவதற்கு முன், தேசிய பருத்தி

ஆலோசனை கழகம் கூடி, பருத்தி பயன்பாடு குறித்து விவாதித்தது. அதன்படி, முந்தைய கையிருப்பு 40.50 லட்சம் பேல்; இறக்குமதி ஐந்து லட்சம் பேல்; விளைச்சல் 325 லட்சம் பேல் கிடைக்கும் என கணக்கிடப்பட்டது. அவற்றில், உள்நாட்டு தேவைக்கு 250 லட்சம் பேல்; "நான் மில்' தேவைகளுக்கு 20 லட்சம் பேல்; ஏற்றுமதிக்கு 55 லட்சம் பேல் என்று கணக்கிடப்பட்டது.

கையிருப்பாக 50 லட்சம் பேல் சேமிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.அந்த கணக்கின் அடிப்படையில், ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. கடந்த மார்ச் மாதத்துடன், 55 லட்சம் பேல் பஞ்சு ஏற்றுமதியாகி விட்டது. வடமாநிலங்களில் ஏற்பட்ட பருவ நிலை மாற்றம் காரணமாக, பருத்தி விளைச்சல் பாதிக்கப் பட்டு, விளைச்சல் வெகுவாக குறைந்து விட்டது. மறுமதிப்பீடு செய்ததில், 312 லட்சம் பேல் மட்டுமே கிடைக்கும் என மதிப்பிடப்பட்டது.

மொத்த இருப்பு 357.50 லட்சம் பேலாகவும், பயன்பாடு 330 லட்சம் பேலாகவும், இறுதி கையிருப்பு 27.50 லட்சம் பேல் மட்டுமே இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தியின் தேவை அதிகரித்திருந்ததால், விலையும் மளமளவென உயர்ந்து விட்டது. கடந்தாண்டு, ஒரு கேண்டி பஞ்சு 36 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது; தற்போது, 63 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. விலை உயர்வுக்கு, ஏற்றுமதிக்கு அனுமதித்ததே முக்கிய காரணம் என்கின்றனர் தொழில் துறையினர்.இந்தியாவின் மொத்த விளைச்சலில் 33 சதவீத பருத்தி கையிருப்பு இருக்க வேண்டும் என்பது விதிமுறை.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கையிருப்பு காலியாகி வருகிறது. இதனால், ஓரிரு ஆண்டுகளில் பலத்த பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதால், பருத்தி கொள்கையை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற வலியுறுத்துகின்றனர்.தேசிய பருத்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் ராஜா சண்முகம் கூறியதாவது:பருத்தியை விவசாயிகளிடம் இருந்து தொழில் துறையினர் மட்டுமே வாங்க வேண்டுமென விதிமுறை வகுக்க வேண்டும். கையிருப்பாக வைக்கப்படும் பருத்தி, எங்கே இருக்கிறது என்பதை யாராலும் கண்டறிய முடிவதில்லை.சி.சி.ஐ., மூலமாகவே மொத்த பருத்தியையும் கொள்முதல் செய்து, விலை நிர்ணயம் செய்து நூற்பாலைகளுக்கு வழங்க வேண்டும். உபரி ஏற்படும் பட்சத்தில், நியாயமான விலையில் ஏற்றுமதி செய்யலாம்.

கையிருப்பு 27 லட்சம் பேலாக குறைவது, ஜவுளித்துறைக்கு ஆபத்தாக முடியும். கூடுதல் ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் துவக்கப்படும் போது, பஞ்சு தட்டுப்பாடு ஏற்படும். ஏற்கனவே இயங்கும் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்தாலும் பஞ்சு கிடைக்காது; நூல் விலையும் உயர்ந்து ஜவுளித்தொழில் ஸ்தம்பிக்கும். எனவே, மத்திய அரசு பருத்தி கொள்கையை மாற்ற வேண்டும் என அடுத்த ஆலோசனை கூட்டத்தில் வலியுறுத்தப்படும், என்றார்.

**ரூ.16 லட்சத்துக்கு சூரியகாந்தி வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2011,21:28 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்துக்கு, சின்ன தாராபுரம், கரூர், பள்ளபட்டி, பாப்பம்பாளையம், ஈசநத்தம் பகுதிகளில் இருந்து சூரியகாந்தி கொண்டு வரப்பட்டது. 200 விவசாயிகள் 4,000 மூட்டை சூரியகாந்தி விதையை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதிகபட்ச விலை ரூ.32.49; குறைந்தபட்ச விலை ரூ.28.00 என சூரியகாந்தி தரத்தை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கோபி, ஈரோடு, முத்தூர், காங்கயம் பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

மொத்தம் ரூ.16 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.கண்காணிப்பாளர் மகுடேஷ்வரன் கூறுகையில், ""சீசன் துவங்கியுள்ளதால், வெளியூர்களில் இருந்து அதிகளவு சூரிய காந்தி வரத்துள்ளது. சில ஆண்டுகளாக உள்ளூர் விவசாயிகள் சூரியகாந்தி சாகுபடியில் ஆர்வம் இன்றி இருந்தனர். தற்போது, வெள்ளகோவில் சுற்றுப்பகுதி களிலும் அதிகளவு விவசாயிகள் சூரியகாந்தி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், வரும் வாரங்களில் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

**தக்காளி விலை வீழ்ச்சியால்ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள்பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2011,23:09 IST

ஆண்டிபட்டி:தக்காளி விலை சரிவால் ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். தக்காளி பறிப்பு கூலி கூட கிடைக்காத நிலை உள்ளது.
ஆண்டிபட்டி பகுதி பாலக்கோம்பை, ராயவேலூர், சுந்தரராஜபுரம், சேவாநிலையம், தெப்பம்பட்டி, சித்தார்பட்டி, அணைக்கரைப்பட்டி, மூணாண்டிபட்டி, திம்மரசநாயக்கனூர், புள்ளிமான்கோம்பை உட்பட பல கிராமங்களில் விவசாயிகள் இறவை பாசனம் செய்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு தக்காளிக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. ஒரு கிலோ தக்காளி ரூபாய் 50 வரை விற்பனையானது. ஆனால் மழைக்காலம் என்பதால் குறைவான அளவிலேயே உற்பத்தி இருந்தது.மழை காலம் முடிந்ததும் பல விவசாயிகளும் தக்காளி சாகுபடிக்கு மாறினர்.

இப்பகுதியில் ஒட்டு ரக தக்காளி சாகுபடியில் அதிக கவனம் செலுத்தினர். தக்காளி உற்பத்தி அதிகரித்ததால் விலையில் சரிவு ஏற்பட்டது.விவசாய நிலங்களில் உற்பத்தி இடத்திற்கு

முன்கூட்டியே வந்து அட்வான்ஸ் கொடுத்து தக்காளியை வாங்கிய வியாபாரிகள், தற்போது தக்காளியை மார்க்கெட்டுக்கு கொண்டு வரவேண்டாம், விலை கிடைக்காது என்று முன்கூட்டியே சொல்லி விடுகின்றனர்.

விளைந்த தக்காளிக்கு எடுப்பு கூலி கூட கிடைக்காமல் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். தற்போது தக்காளி விலை கிலோ ஐந்து ரூபாய் அளவுக்கு குறைந்துவிட்டது. உற்பத்தி செய்த தக்காளி சில நாட்களில் கெட்டு விடும். இவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் விவசாயிகள் தவிப்பில் உள்ளனர்.

## ***மார்ச்சுடன் நிறைவடைந்த ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 3.25 லட்சம் டன்னாக உயர்வு***



*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 3.25 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டை விட 60 சதவீதம் அதிகமாகும். அளவின்*

*அடிப்படையில் சென்ற நிதி ஆண்டில்தான் ஏற்றுமதி முதல் முறையாக இந்த அளவிற்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*டாலர் மதிப்பில்...*

*டாலர் மதிப்பில் இது 83 சதவீதம் உயர்ந்து 81.10 கோடியாக அதிகரித்துள்ளது. இந்திய காபிக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்ததே இதற்கு காரணமாகும். ஒரு கிலோ காபி ரூ.116 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய நிதி ஆண்டில் ரூ.106 என்ற அளவில் இருந்தது. கடந்த ஆண்டில், ரூபாய் மதிப்பில் காபி ஏற்றுமதி 75 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.3,789 கோடியாக உயர்ந்துள்ளது.*

*நம் நாட்டிலிருந்து இத்தாலி அதிக அளவில் காபி இறக்குமதி செய்கிறது. நாட்டின் மொத்த காபி ஏற்றுமதியில் அந்நாட்டின் பங்களிப்பு 24 சதவீதமாக உள்ளது. அடுத்தபடியாக ஜெர்மனியின் பங்களிப்பு 14 சதவீதமாகவும், பெல்ஜியத்தின் பங்களிப்பு 10 சதவீதமாகவும் உள்ளது. சென்ற ஆண்டில் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதற்கு உற்பத்தி நன்றாக இருந்ததும் ஒரு முக்கிய காரணமாகும். இந்தியாவின் மொத்த காபி உற்பத்தியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. கடந்த நிதி ஆண்டில் கையிருப்பில் இருந்த 30,000 டன் காபி ஏற்றுமதியாகி உள்ள நிலையில் டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரையில் உற்பத்தியான காபியும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக இக்காலத்தில் கிடைக்கும் காபி நடப்பு நிதி ஆண்டுக்காக கையிருப்பில் இணைக்கப்படும்.*

*காபி உற்பத்தி*

*சென்ற ஆண்டில் நாட்டின் காபி உற்பத்தி 2.99 லட்சம் டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 3.2 சதவீதம் அதிகமாக இருக்கும். அராபிகா காபி 90,000 டன் உற்பத்தி ஆகியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரோபஸ்டா அறுவை இன்னும் நிறைடையவில்லை. எனினும் ரோபஸ்டா உற்பத்தி 2.04 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

## நடப்பு 2011–ஆம் ஆண்டில் உலக வர்த்தக வளர்ச்சி 6.5 சதவீதமாக குறையும்

*நடப்பு 2011 காலண்டர் ஆண்டில் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் (ஏற்றுமதி+இறக்குமதி) 6.5 சதவீதம் உயரும் என ஐ.நா. சபையின் உலக வர்த்தக அமைப்பு மதிப்பிட்டுள்ளது. இது, 2010–ஆம் ஆண்டில் 14.5 சதவீத வளர்ச்சி கண்டிருந்தது. ஆக, நடப்பு ஆண்டில் வர்த்தக வளர்ச்சி குறைகிறது.*

*இடர்பாடு*

அண்மையில் எகிப்தில் பெரும் கலவரம் தோன்றி இருந்தது. ஜப்பான் நாடு சுனாமியில் சிக்கியது. லிபியாவில் கிளர்ச்சி நீடிக்கிறது. மத்திய கிழக்கு ஆசிய பகுதிகளில் குழப்பம் நிலவுகிறது. ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் இவ்வாறு பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் உலக வர்த்தகத்தின் வளர்ச்சி சென்ற ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் வளர்ந்து வரும் நாடுகளில்தான் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகள் விறுவிறுப்பாக நடைபெறும் என்று தெரிகிறது. சீனா, இந்தியா போன்ற நாடுகள் முன்னிலையில் இருக்கும் என்றும், இந்த நாடுகளின் வர்த்தகம் 9.5 சதவீதம் வளர்ச்சி காணும் என்றும் உலக வர்த்தக அமைப்பு தெரிவித்துள்ளது. அதே சமயம் வளர்ச்சி அடைந்த நாடுகளின் வர்த்தகம் 4.5 சதவீதமே அதிகரிக்கும் என இவ்வமைப்பு எதிர்பார்க்கிறது.

பணக்கார நாடுகள்

நடப்பு ஆண்டில் அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 2.2 சதவீதமாகவும், வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சி 5.8 சதவீதமாகவும் இருக்கும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகம் குறித்த மதிப்பீடுகளை உலக வர்த்தக அமைப்பு வெளியிட்டுள்ளது. 1990–லிருந்து 2008–ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் உலக வர்த்தகம் ஆண்டுக்கு சராசரியாக 6 சதவீதம் வளர்ச்சி கண்டு வந்துள்ளது.

தினகரன்

## தேயிலை தேக்கத்தால் ரூ.15 கோடி இழப்பு?

பதிவு செய்த நாள் 4/9/2011 12:31:02 AM



குன்னூர்: குன்னூர் தனியார் தேயிலை ஏல மையத்தில் கடந்த 3 மாதங்களாக நடந்த ஏலத்தில் ரூ.3.65 கோடி மதிப்பிலான 46 சதவீத தேயிலைத்தூள் தேக்கம் அடைந்துள்ளது. இந்த காலக் கட்டத்தில் நடந்த ஏலத்தில் 99.8 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனையாகி உள்ளது. சராசரி கிலோ ஒன்றுக்கு ரூ.72.41 விலை கிடைத்தது. இதனால் கிடைத்த மொத்த வருமானம் ரூ.72.07 கோடி. கடந்த ஆண்டு முதல் 3 மாதங்களில் 109 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனையானது.

சராசரி கிலோ ஒன்றுக்கு ரூ.69.56 விலை கிடைத்தது இதன்மூலம் மொத்த வருமானம் ரூ.75.82 கோடி கிடைத்தது. தேயிலைத் தூளின் சராசரி விலை அதிகரித்தாலும் வர்த்தகத்தின் தேவை நாளுக்கு நாள் குறைந்ததால் தொடர்ந்து தேக்க நிலை ஏற்பட்டு வருகிறது. இது தொடரும் பட்சத்தில் இந்த ஆண்டின் இறுதியில் ரூ.15 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.